**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்க்ஷா, B.B.A.,L.L.B (Hons)**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 232/2023**
**CNR.No.TNTT110046642023**
*********

| | | |
|---|---|---|
| **1.** | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | **அரசுக்காக,**<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>நாசரேத் காவல் நிலையம்,<br>(குற்ற எண்.191/2021) |
| **2.** | எதிரிகளின் பெயர் (Name) | 1) **திருமதி. ராசம்மாள், வயது 67,**<br>க/பெ. செல்வராஜ்,<br>5/31, சுப்பிரமணியபுரம்.<br><br>2) **திருமதி. லட்சுமி, வயது 46,**<br>க/பெ. மாசானமுத்து,<br>5/20, சுப்பிரமணியபுரம்.<br><br>3) **திரு. ஜெய சூர்ய பிரகாஷ் (எ) சூர்யா, வயது 25,**<br>த/பெ. மாசானமுத்து,<br>5/20, சுப்பிரமணியபுரம்.<br><br>கூலி |
| **3.** | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| **4.** | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| **5.** | எதிரிகளின் முகவரி (Residence) | |
| **6.** | எதிரிகளின் வயது (Age) | |
| **7.** | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 27.09.2021 |
| **8.** | புகார் தேதி (Complaint) | 30.09.2021 |
| **9.** | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | எதிரிகள் காவல்நிலைய ஜாமீனில் சென்றதால் கைது செய்யப்படவில்லை |
| **10.** | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | எதிரிகள் காவல்நிலைய ஜாமீனில் சென்றதால் கைது செய்யப்படவில்லை |
| **11.** | Commitment | ----- |
| **12.** | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 04.05.2026 |
| **13.** | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 05.06.2026 |
| **14.** | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | முடிவில், 1 மற்றும் 2 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இன் கீழும், 3 ஆவது எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்களை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| **15.** | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள் |



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 16:55:25 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | குறித்த முடிவு (Service of Copy of Judgment or Finding on Accused) | | | |
| **16.** | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) இன் கீழ் எதிரியை விசாரணை செய்த நாள் (Date of examination of accused U/s 313(1)(b) | 05.06.2026 | | |
| **17.** | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட நாள் (Date of examination in chief and cross examination of witnesses) | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | PW1 | 02.06.2026 | 02.06.2026 |
| | | PW2 | 03.06.2026 | 03.06.2026 |
| **18.** | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of Cognizance) | 22.06.2023 | | |

இவ்வழக்கானது என் முன்பு 05.06.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபொழுது எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.முத்து இளவரசன் அவர்கள் முன்னிலையாகியும் அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II செல்வி.பிரீத்தி ராணி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்….

## தீர்ப்புரை

**1. குற்றச்சாட்டு :-**

**1.1.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான கனியம்மாள் வெள்ளமடம் எம்.ஜி.ஆர் நகரில் குடியிருந்து வந்தார். அவர் கோழி மற்றும் மாட்டினை வளர்த்து வந்தார். அவரது பக்கத்து வீட்டை சேர்ந்த லட்சுமிக்கும் (2 ஆவது எதிரி) புகார்தாரருக்கும் மாட்டுத்தொழுவம் பராமரிப்பு சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்தது. 27.09.2021 ஆம் தேதி காலை 6 மணிக்கு புகார்தாரர் காலை கடனை கழிப்பதற்காக சந்து வழியாக சென்று கொண்டிருந்தபோது லட்சுமி (2 ஆவது எதிரி) அவருடைய வீட்டு முன்பு முற்றம் தெளித்து கொண்டிருந்தார். புகார்தாரரை பார்த்ததும் கையில் வைத்திருந்த அலுமினிய வாளியுடன் 1 மற்றும் 2 எதிரிகள் புகார்தாரரை எங்கும் செல்லவிடாமல் வழிமறித்தனர். பின்பு புகார்தாரரிடம் 1 மற்றும் 2 எதிரிகள் இது எங்களுக்கு சொந்தமான பொதுபாதை எப்படி இந்த பாதையில் நீ வருவாய், உன் புருஷன் வீட்டு இடமா தேவடியா இங்கே வர இந்த பாதையில் நீ வரவே கூடாது என்று ஆபாசமான வார்த்தைகளால் பேசினார்கள்.

**1.2.** 3 ஆவது எதிரியும் புகார்தாரரை ஆபாசமான வார்த்தைகளால் பேசினார். 2 ஆவது எதிரி கையில் வைத்திருந்த அலுமினிய வாளியை கொண்டு புகார்தாரரின் தலை, நெற்றி, வலது கை மற்றும் வலது தோள்பட்டையில் தாக்கினார். புகார்தாரரின் வலது காதை கம்மலுடன் இழுத்ததில் காது இரண்டாக கிழிந்தது. 1 ஆவது எதிரி ஷீட்டு ஓட்டினை கொண்டு புகார்தாரரின் வலது தோள்பட்டையில் தாக்கினார். 3 ஆவது எதிரி புகார்தாரரின் வலது இடுப்பு மற்றும் நெஞ்சில் ஓங்கி மிதித்தார். 1 முதல் 3 எதிரிகள் புகார்தாரரைப் பார்த்து இன்றைக்கு நீ தப்பித்து விட்டாய் நாங்கள் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள்.

**1.3.** எனவே, 1 ஆவது எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இன் கீழும், 2 ஆவது எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323,



DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 16:55:40 +0530

324, 506(ii) இன் கீழும், 3 ஆவது எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் என்று அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. குு.வி.மு.ச பிரிவு 207 இன் கீழ் நகல் :-**

அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207-இன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 இன் கீழ் விசாரணை :-**

3.1. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

3.2. இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இன் கீழும், 3 ஆவது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(ii) இன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவர்களிடம் விளக்கி கூறிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள் :-**

பட்டியல் சாட்சியில் இருந்து ஒரு நபரும் கூடுதல் சாட்சியாக காவல் உதவி ஆய்வாளர் திரு. நாகராஜன் என்பவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்; அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு :-**

**5.1.** அ.சா.1 - கனியம்மாள் வெள்ளமடம் எம்.ஜி.ஆர் நகரில் குடியிருந்து வந்தார். அவர் கோழி மற்றும் மாட்டினை வளர்த்து வந்தார். அவரது பக்கத்து வீட்டை சேர்ந்த லட்சுமிக்கும் (2 ஆவது எதிரி) அ.சா.1 க்கும் மாட்டுத்தொழுவம் பராமரிப்பு சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்தது. 27.09.2021 ஆம் தேதி காலை 6 மணிக்கு அ.சா.1 காலை கடனை கழிப்பதற்காக சந்து வழியாக சென்று கொண்டிருந்தபோது லட்சுமி (2 ஆவது எதிரி) அவருடைய வீட்டு முன்பு முற்றம் தெளித்து கொண்டிருந்தார். அ.சா.1 ஐ பார்த்ததும் கையில் வைத்திருந்த அலுமினிய வாளியுடன் 1 மற்றும் 2 எதிரிகள் அ.சா.1 ஐ எங்கும் செல்லவிடாமல் வழிமறித்தனர்.

**5.2.** பின்பு அ.சா.1 யிடம் 1 மற்றும் 2 எதிரிகள் இது எங்களுக்கு சொந்தமான பொதுபாதை எப்படி இந்த பாதையில் நீ வருவாய், உன் புருஷன் வீட்டு இடமா தேவடியா இங்கே வர இந்த பாதையில் நீ வரவே கூடாது என்று ஆபாசமான வார்த்தைகளால் பேசினார்கள். 3 ஆவது எதிரியும் அ.சா.1 ஐ ஆபாசமான வார்த்தைகளால் பேசினார். 2 ஆவது எதிரி கையில் வைத்திருந்த அலுமினிய வாளியை கொண்டு அ.சா.1 இன் தலை, நெற்றி, வலது கை மற்றும் வலது தோள்பட்டையில் தாக்கினார். அ.சா.1 இன் வலது காதை கம்மலுடன் இழுத்ததில் காது இரண்டாக கிழிந்தது. 1 ஆவது எதிரி சீட்டு ஓட்டினை கொண்டு அ.சா.1 இன் வலது தோள்பட்டையில் தாக்கினார். 3 ஆவது எதிரி அ.சா.1 இன் வலது இடுப்பு மற்றும் நெஞ்சில் ஓங்கி மிதித்தார். 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1 ஐ பார்த்து இன்றைக்கு நீ தப்பித்து விட்டாய் நாங்கள் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்தார்கள்.

**5.3.** கடந்த 30.09.2021 ஆம் தேதி 18.00 மணிக்கு தலைமை காவலர்


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.05 16:55:45 +0530

பழனிநாதன் என்பவர் நிலையத்தில் இருந்தபோது, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வந்த கனியம்மாள் என்பவரது புகார் வாக்குமூலத்தை (அ.சா.ஆ.2) முதல்நிலை பெண் காவலர் திருமதி.மரிய செல்வி என்பவரிடமிருந்து பெற்று புகார்வாக்குமூலத்தின் தன்மையின் படி நிலைய குற்ற எண்.191/2021, இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்தார்.

**5.4.** வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.ராய்ஸ்டன் 30.09.2021 ஆம் தேதி 19.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆல்வின், ராஜீவ்காந்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகசர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்தார். சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தார். இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 கனியம்மாளுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.சிவக்குமார் என்பவரை விசாரித்து அவர் வழங்கிய காயச்சான்றிதழ் (அ.சா.ஆ.6) கிடைக்கப்பெற்றார் .

**5.5.** வழக்கின் சட்டப்பிரிவை இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) என்பதில் இருந்து இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை (அ.சா.ஆ.7) தாக்கல் செய்தார். அவருடைய விசாரணையில் இருந்தும், சாட்சிகள் வாக்குமூலங்களிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரிகள் மீது 06.04.2023 ஆம் தேதியன்று இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii) இன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

**6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) இன் கீழ் விசாரணை</u> :-**

6.1. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவர்களிடம் விளக்கி கேட்ட போது, எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்கள்.

6.2. மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u> :-**

1 மற்றும் 2 எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இன் கீழும், 3 ஆவது எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :-**

**8.1.** இந்த வழக்கில் காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 – கனியம்மாள் அவருடைய சாட்சியத்தில், அவர் சுப்பிரமணியபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருவதாகவும், எதிரிளை தெரியும் என்றும், வழக்கு சம்பந்தமாக அவருக்கு எதுவும் தெரியாது என்றும், அவரிடம் காண்பிக்கப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அவருடையது தான் அதிலுள்ள விபரங்கள் அவருக்கு தெரியாது என்றும், போலீசார் அவரை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**8.2.** இந்த வழக்கில் அ.சா.1 – கனியம்மாள் கொடுத்ததாக உள்ள புகார்வாக்குமூலத்திற்கும், அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கிற்கும் முரணாக அவர் சாட்சியம் அளித்ததால் அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்த போதிலும் அவரிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்விதமான சாட்சியமும்



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.05 16:55:50 +0530

பெறவில்லை.

**8.3.** மேலும், அ.சா.ஆ.2– புகார்வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து அவருடையது என்று அ.சா.1 – கனியம்மாள் ஒப்புக்கொண்ட போதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிபடுத்த சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகார்வாக்குமூலம் அ.சா.1 – கனியம்மாளால் கொடுக்கப்பட்டதா? என்பதும் சந்தேகம் கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1 – கனியம்மாளின் சாட்சியம் மூலம் அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலம் அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

**8.4.** தவிர, அ.சா.1 வழக்கு சம்பந்தமாக அவருக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட்டு காவல் உதவி ஆய்வாளர் திரு. நாகராஜன் என்பவர் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தை தவிர இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்த சூழ்நிலையில், புலன்விசாரணை கோப்புகளை பார்த்து சாட்சியமளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரிகளை குற்றவாளிகள் என்று முடிவு செய்ய போதுமானதல்ல.

**8.5.** இதன் மேலே பரிசீலனை செய்யப்பட்ட சாட்சியங்களின் ஒட்டு மொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதி, இந்த வழக்கில் எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

**9. முடிவு:-**

**9.1.** முடிவில், 1 மற்றும் 2 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இன் கீழும், 3 ஆவது எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்களை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

9.2. இவ்வழக்கில் எதிரிகள் ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

9.3. இவ்வழக்கில் சொத்துப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டும், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டும், இன்று 05.06.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 16:55:53 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| அரசு தரப்பு சாட்சிகள் வரிசை எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. கனியம்மாள் | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. நாகராஜன் | காவல் உதவி ஆய்வாளர் |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | நிரூபணம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 30.09.2021 | புகார்வாக்குமூலத்திலுள்ள அ.சா.1 இன் கையெழுத்து மட்டும் | அ.சா.1 இன் மூலமாக |
| அ.சா.ஆ.2 | 30.09.2021 | புகார்வாக்குமூலம் | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.3 | 30.09.2021 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.4 | 30.09.2021 | பார்வைமகஜர் | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.5 | 30.09.2021 | மாதிரி வரைபடம் | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.6 | 27.09.2021 | அ.சா.1 இன் காயச்சான்றிதழ் | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.7 | 06.04.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.2 இன் மூலமாக |

**3. அரசு தரப்பு சான்று பொருள் :-**இல்லை
**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள் :-** இல்லை
**5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் :-** இல்லை
**6. எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள் :-** இல்லை

**Case Summary**

**1.** எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் **:-** இல்லை
**2.** குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் - 14.06.2023
**3.** எதிரிகள் முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் - 04.05.2026
**4.** எதிரிகள் மீதான குற்றச்சாட்டு விளக்கி கேட்ட நாள் - 04.05.2026
**5.** இடைக்கால மனு விபரம் **:-**இல்லை
**6.** எதிரிகள் தலைமறைவாக இருந்த விவரம் **:-** இல்லை
**7.** மாண்பமை மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் - இல்லை

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 16:55:57 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.

**குறிப்பு :-**

**1.** விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
**2.** சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
**3.** தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.